# இயல் 7.3 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.1.2.I

இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

மாரிமுத்து தினக்கூலிக்கு வேலைசெய்து பிழைப்பு நடத்தும் ஒரு தொழிலாளி. நேற்று அவர் அரை நாள் வேலை செய்ததால் அவருக்கு பகுதி தின ஊதியமே கிடைத்தது. அவர் நேற்று கிடைத்த ஊதியத்தில் ஒரு பகுதித்தொகை வீட்டிற்கு பலசரக்கு வாங்குவதற்காக செலவிட நேர்ந்தது. அவ்வாறு செலவிட்டபின் பாக்கியிருந்த ₹180-யை தன் மனைவியிடம் கொடுத்துவிட்டார்.

இன்று அவர் முழுதினமும் வேலை செய்து முழு தினக்கூலி ஈட்டினார். மாலை வந்தபின் தன் மகனுடன் கடைக்குச்சென்று அவனுக்கு 2-ம் வகுப்புப் புத்தகங்கள் வாங்கிக்கொடுத்தார். அதற்கு நேற்று ஆன செலவைப்போல் 3 மடங்கு செலவானது. அவ்வாறு செலவு செய்த பின் அவரிடம் பாக்கி ₹140 இருந்தது. எனில் அவரின் முழுதினக்கூலி என்ன? மற்றும் அவர் முதல் தினம் பலசரக்கு வாங்குவதற்காக செலவிட்ட தொகை எவ்வளவு?

### அனுமானங்கள்

(1) மாரிமுத்துவின் முழுதினக்கூலியை $x$ எனக்கொள்க. அதாவது, இரண்டாம் நாள் கிடைத்த கூலி.

(2) அவர் முதல் நாள் பலசரக்கு வாங்குவதற்கு செய்த செலவை $y$ எனக்கொள்க.

(3) அவ்வாறெனில் முதல் நாள் கிடைத்த அரைதினக்கூலி = $\frac{1}{2}x$.

(4) கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளது போல், அவர் இரண்டாம் நாள் புத்தகம் வாங்குவதற்காக செலவிட்ட தொகை = $3y$.

$\frac{1}{2}x - y = 180$ முதல் நாள் ...... Eqn.①

$x - 3y = 140$ 2-ம் நாள் ...... Eqn.②

சமன்பாடு 1-ன் இரு பக்கங்களையும் 2-ஆல் பெருக்க . . .

$$2 \times \frac{1}{2}x - 2 \times y = 2 \times 180$$

$$x - 2y = 360$$

$$x = 360 + 2y$$

மேலே கிடைத்த $x$-ன் மதிப்பை சமன்பாடு 2-ல் மாற்றீடு செய்கையில் . . .

$$360 + 2y - 3y = 140$$

$$360 - y = 140$$

$$360 - 140 = y$$

$$y = \boxed{220}$$

மேலே கிடைத்த $y$-ன் மதிப்பை சமன்பாடு 2-ல் மாற்றீடு செய்கையில் . . .

$$x - 3 \times 220 = 140$$

$$x = 140 + 660 = \boxed{800}$$

மாரிமுத்துவின் முழுதினக்கூலி ₹800 ஆகும். அவர் முதல் தினம் பலசரக்கு வாங்குவதற்காக செலவிட்ட தொகை ₹220 ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Thursday 28th July, 2022 :: 05:33 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**